# பிரஜானுகூலன்.

பருவம் 2 } திரிச்சி 1905-௵ மே-௴ { இலக்கம் 2.

## விசேஷ அறிக்கை.

நமது பிரஜானுகூலன் பத்திரிகையானது சென்ற மே௴ முதல் தேதியன்று வெளி வரவேண்டியதிருக்க இவ்வளவு நாட்சென்று வெளி வந்ததைக் குறித்து சந்தாதாரர்களின் மனதுக்கு அதிக வருத்தமுண்டா யிருக்கலாம். நிச்சயமாகவே வருத்தமுண்டாக வேண்டியதும் கிரமந் தான். அங்ஙனம் வருத்த முண்டாகாதிருப்பின் அது பத்திரிகாபிமானத்தைக் காட்டாதன்றோ? ஆகவே உள்ளபடி மனவருத்த மடைந்திருக்கும் பத்திரிகாபிமானிகள் யாவருக்கும் இங்ஙனம்நேர்ந்ததாமதத்தின் காரணத்தை எடுத்துக் காட்ட யாம் கடமை யுடையோமாகையால் சுருக்கமாய் இதனடியில் இரண்டொன்று கூறுவாம்.

"நல்ல காரியத்துக்கு நாலாயிரம் விக்கினங்கள்" என்பார் உலகோர். அது முற்றும் நம் அனுகூலன் விஷயத்திலேயே நிறைவேறுவதாயிருப்பதும் மிகவும் விசனிக்கத் தக்கதே. நமது கையொப்பக்காரர்களிடமிருந்து சந்தாத் தொகைகளை வசூலிப்பதில் பல கஷ்டங்களேற்பட்டன. இதற்கிடையில் எமது பிதாவாகிய மகா-ா-ா-ஸ்ரீ S. கோவிந்தசாமி நாயுடு அவர்களும் 1905௵ ஏப்ரல்௴ 21௳ வெள்ளிக் கிழமையன்று காலஞ்சென்றார்கள். இங்ஙனமே நேர்ந்த பலஇடையூறுகளால் மே௴ சஞ்சிகையைத் தாமதமாய் வெளியிடும்படியாக சம்பவித்ததுடன் ஜூன், ஜூலை மாதத்திய சஞ்சிகையையும் காலந்தாழ்த்துப் பிரசுரிக்கும்படி நேரிட்டிருப்பதற்கு நாம்மிகவும் வியஸனிக்கின்றோம். அநுகூலனின் இரண்டாவது ஸம்வத்ஸரத்தில் குறிப்பிட்ட தேதியிலேயே வெளியிட வேண்டுமென்றெண்ணி யிருந்தோம். தானொன்றுநினைக்கத் தெய்வமொன்றுநினைத்ததென்பதற் கிணங்க முடிந்ததைப்பற்றி யாமடையும் சஞ்சலத்திற் கெல்லையில்லை. ஆயினும் குறிப்பிட்ட தேதியில் பிரகடனஞ் செய்வதற்கு எம்மாலியன்றளவும் முயற்சி செய்தே வருகின்றோம். சந்தாதாரர்கள் மன்னிப்பார்களாக.

பத்திராதிபர்.

# பொருள்.

[முன்தொடர்ச்சி.]

அப்படிக் கெட்டவழியிலாவது பொருள்தேடி நீடூழி வாழ்கின்றனரா? அதுவுமில்லை. தீச்செயலினாலாவது பொருள் சம்பாதிக்கவேண்டுமென்றெண்ணுகிறவன் ஒருக்காலும் நல்வழியில் செலவுசெய்து கீர்த்தியடையமாட்டானென்பது திண்ணம். நல்வழியிற் பொருளைச் செலவிடாமற் செல்வச் செருக்கினாற் பிறரை மதியாத அற்பருடைய செல்வம் மின்னல்தோன்றி மறைவதுபோல் விரைவில் அழிந்துபோம். (நாலடியார்) 'செல்வர் யாமென்றுதாஞ்செல்வுழி யெண்ணாத, புல்லறிவாளர் பெருஞ்செல்வம்--எல்லில், கருங்கொண்மூவாய்திறந்த மின்னுப்போற்றோன்றி, மருங்கறக்கெட்டுவிடும்." இப்படிப்பட்ட நூல்களின் நியாயங்களுணர்ந்தேனும் சன்மார்க்கத்தில் நடப்பரோ? இல்லை, இல்லை. கிரமமாக மனிதரது வயது நூறே. அதில் ஐம்பது இரவிலுண்டாகும் நித்திரையிலும், ஐந்து குழந்தைப் பருவத்திலும், பதினைந்து இளமைப் பருவத்திலும் ஒழிந்துபோம். மற்ற முப்பதில் தான் சகல இன்ப துன்பங்களும் அனுபவிக்கவேண்டும். ஆற்று நீர்ப்பெருக்கை யொத்தது செல்வம். ஆற்றுப் பெருக்கின் இடிகரையை ஒத்தது இளமை. இடிகரையில் வளரும் மரத்தை ஒத்தது வாழ்நாள். இவ்வாறிருக்க சிலர் கற்பகோடிகாலம் இப்பூமியின்கண் வாழ்வது போல எண்ணியும் செல்வம் எப்பொழுதும்நீங்காததென்றெண்ணியும் சற்பாத்திரத்திற் செலவிடாமல் வீணாகக் கெட்டுப்போகின்றனர். (நாலடியார்) "புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை யென்றெண்ணி, இன்னினியே செய்க அறவினை--இன்னினியே, நின்றானிருந்தான் கிடந்தான் தன் கேளலறச், சென்றானெனப்படுதலால்." என்பதையும் (குறள்) 'நெருநலுள னொருவனின்றில்லையென்னும், பெருமையுடைத்திவ்வுலகு' என்பதையும் பிறவற்றையும் நன்குணர்தல்வேண்டும். சிலர் தருமம்செய்யத் தக்கமனம் பொருந்தாதவராயிருப்பினும் டாம்பீகத்திற்காகவேனும் அதிகார வரம்புக்குக் கீழ்ப்படிந்தேனும் தம்மையடைந்தவர்க்குப் பொருளுதவி செய்கின்றனர். அதனால் பயனேதேனுமுண்டோ? எத்துணை நன்மையுமுண்டாகாது. தீச்செயல்களை யொழித்து நல்வழியில் பொருளைச்சம்பாதித்துத் தரித்திரக் கடலிலாழ்ந் துழல்கின்ற பஞ்சைகட்குத்தம்மா லியன்றமட்டும் இரக்கங் கொண்டுபொருளுதவிசெய்யவேண்டும். நாஸ்திலசனங்கூறுவ தும்இன்று நாளையென்று நம்பும்படியாகச் சொல்லியிழுத்தடித்துக் கடைசியாகக் கையைவிரிப்பதும் பழிப்பும் பாவமுமே யாம். நாளை நாளையென்பது நம்முடைய நாளோ நமனுடைய நாளோ? ஒருவன் தேடிவந்தபோதே உதவுவது தான் மேன்மை. ஒருக்கால் அச்சமயம் சரிப்படாமல் போனால் இயலுங்காலத்தைக் குறிப்பிட்டு வரச்செய்து உதவவேண்டும். தேடிய பொருள் அந்தியகாலத்தில் உதவாது. ஈவதாலுண்டாகும் கீர்த்தி தான் எப்போதும் துணையாக நிற்கும். (குறள்)" அன்றறிவாமென்னா தறஞ் செய்கமற்றது, பொன்றுங்காற் பொன்றாத்துணை." " அறத்தாறிது வெனவேண்டா சிவிகை, பொறுத்தானோடூர்ந்தானிடை" என்று நாயனார் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர். தம்மிடம்யாசகார்த்தமாய் வரும் ஏழையானவன் முற்பிறப்பில் பரமலோபியாயிருந்ததனால் இப்பிறப்பில் தரித்திரனானானென்றும் முன்தருமஞ்செய்திருப்பின் இப்போ

தும் நம்மைப்போல்செல்வவானாகப்பிறந்திருப்பானென்றும்பணக்காரர் மனதில் திண்ணமாக நினைத்தல்வேண்டும். அப்படி நினைக்கவேண்டுவது முக்கியமான விஷயம். (நாலடியார்) "நல்லார் நயவரிருப்ப நயமிலாக், கல்லார்க்கொன்றாகிய காரணம்-- தொல்லை, வினைப்பயனல்லதுவே னெடுங்கண்ணாய், நினைப்ப வருவதொன்றில்" என்று கூறப்பட்டிருப்பதை நன்காராய்ந்தால் புலப்படும். யோக்கியரிடத்துண்டாகும் வறுமையும் அயோக்கியரிடத்துண்டாகும் செல்வமும் அவரவர்க்குத் தக்க நன்மையை விளைவிக்காதென்பது திண்ணம். ஒரு காலத்திலும் குறைவென்பதில்லாமலும் பிறவற்றினுதவி வேண்டாமலுமிருக்கிற கடலினிடத்தே மழை பொழிவதுபோலச் செல்வங்கொண்டோர் சற்பாத்திரத்தில் பொருளைச் செலவிடாமல் அபாத்திரத்திற் செலவிட்டால் ஒருநன்மையும் பெறார். அதனால் இகபரசாதகம் கனவிலுங்காணமாட்டார்கள். தான் தேடிய பொருளை மனதார ஏழைகளுக்கு ஈயாமலும் தானுமனுபவியாமலும் மிகவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றுகிற லோபியானவன் தானருமையாகப் பெற்ற பெண்ணைப் பிறனுடைய சொத்துக்கே உரியளாகும்படியாகச் செய்வதுபோல், தான் பெற்ற செல்வத்தையும் அயலானுக்கே உரியதாகச் செய்கின்றனன். சமுத்திரமானது எவ்வளவும் குறைவற்றதாயிருந்தாலும் அது எவ்வுயிர்கட்கும் பயனற்றதாயிருப்பதுபோல் அயோக்கியனுடைய செல்வமும் பயனற்றதாகிறது. அக்கடலினருகே உண்டாகும் ஊற்றுக்கொப்பாக யாவர்க்கும் உதவி செய்து விளங்கினால் புருஷார்த்தமும் புண்ணியமுங்கிட்டும். கன்றானது ஊட்டுகையில் சந்தோஷமாய்ப் பாலைச்சுரக்கும் பசுவைப்போல் ஏழைகளைக் கண்டவுடனே யிரக்கங்கொண்டு சந்தோஷத்தோடு பொருளுதவி செய்வதுதான் கொடையாம். வலியோர் பலவிதத்தால் வருத்த, மனவெறுப்புடன் தேனீயைப் போலக் கொடுப்பது கொடையாகாது. சில லோபிகள் தாம் கொடாவிட்டாலும் காலவித்தியாசத்தாற் செல்வமிழந்த ஈகையாளனைக் குறிப்பிட்டுக் கண்டலை தெரியாமல் கொடுத்துக் கொடுத்து என்ன பலனைக்கண்டான், வறுமைப்பலனைக்கண்டான் என்று நிந்தை கூறுவர். வறுமையடைந்த ஈகையாளன் பெற்ற யோக்கிய குணமுள்ள மைந்தன் பிறர் செய்யும் நிந்தையைக் கவனியாமல் இயன்றமட்டில் யாசகர்க்குக் கொடுப்பன். (நன்னெறி) "எந்தை நல்கூர்ந்தானிரப்பார்க்கீந் தென்றவன், மைந்தர் தம்மீகை மறுப்பரோ-- பைந்தொடீ, நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க், கன்றுமுதவுங்கனி"; என்பதுவே சாக்ஷியாம். நதியானது இருகரையும் பெருகித் தண்ணீரோடிக் கொண்டிருக்குங்காலத்தில் தன்னையடைந்தவர்க்குத் தாகசாந்தி செய்து வறண்டகாலத்தில் வந்தவர்களை ஓட்டிவிடுகிறதா? அப்போதும் ஊற்றிலிருந்துண்டாகும் தெளிந்த நீரைக்கொடுக்கின்றது. இது யாவர்க்கும் பிரத்தியக்ஷ அனுபோகமே. யோக்கியர் எவ்வளவு கேவல ஸ்திதியிலிருந்தாலும் தம்மைத்தேடிவந்த யாசகர்க்கு இல்லையென்னாமல் தம்மாலியன்றமட்டும் உதவுவர். (நல்வழி) "ஆற்றுப் பெருக்கற்றடிசுடுமந் நாளுமவ்வா, றூற்றுப்பெருக்கா லுலகூட்டும்-ஏற்றவர்க்கு, நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந் தாரானாலும், இல்லையெனமாட்டாரிசைந்து". பொருளை சம்பாதிப்பது பெரிதல்ல. அதனை நல்வழியிலேயே தேடித்தானும் சுகமாக அனுபவித்து நல்வழியிலேயே செலவிடல்வேண்டும். [இன்னும் வரும்.]

சே. கு. விசாகப்பெருமாள் முதலியார்.

# சரித்திரப் பயிற்சி.

(முன்தொடர்ச்சி.)

இத்தேசத்தில் எங்கும் காணதக்கவைகளாயும் இக்காலத்தவர்களால் செய்யக்கூடாததாயும், வேறு நாடுகளில் அகப்படக்கூடாதனவாயும், காலஞ்சென்றும் வன்மை குறையாத தன்மையுள்ளனவாயும் இருக்கிற சிறந்த கோட்டைகளும் ஆலயங்களும் எவர்களால் நிர்மாணம் செய்யப்பட்டன? பிற்காலத்தவர்கள் பிறவிக்கடலின் பெரும்வெள்ளத்திலுழன்று பணத்தையே தெய்வமாகக்கொண்டு பரதேவதையை மறந்து சிற்றின்பங்களில் மனதை நுழையவிட்டு கலிகாலத்தின் பாவ யிருட்டினால் மதியிழந்து நரகத்திற் கிரையாவாரென்று இரங்கி முக்தியளிக்கத்தக்க தெய்வங்களை ஆங்காங்கு பிரதிஷ்டை செய்தவர்கள் யார்? வானம் பார்த்த சீமைகளில் பெரும் பஞ்சத்தால் ஊணிற்கு தானியமற்று பசியினால் வருந்தும் ஏழைகட்கு உதவும்பொருட்டு பெரிய ஏரிகளும் ஆறுகளும் யாரால் வெட்டப்பட்டன? மிகவும் பிரயாசைப்பட்டு சிற்பசாஸ்திரங்கள் யாரால் விருத்திசெய்யப்பட்டன? மானியங்கள் மிகுதியாக விட்டு சிற்பிகள் யாவரால் ஆதரிக்கப்பட்டார்கள்? இப்படிப்பட்ட சாதாரணமான அரசர்களுக்குக் கிடைக்கக்கூடாத தர்மங்களையெல்லாம் கலிகாலத்தில் ஆரம்பத்திலிருந்த அரசர்கள் தான் செய்தார்களென்பதற்கு ஐயமில்லை.

பிறகு பேர்பெற்ற விக்கிரமாதித்தன் ஆரிய வர்த்தத்திற்கு அரசனாக வந்தான். அவன் தேசக்ஷேமத்தின் பொருட்டு உலகத்திற் பிறந்த அரசர்களுக் கெல்லாம் முதன்மை யானவன். கலிபுருடன் செய்யும் காரியமாகிய பெருமலையின் சிற்றறிய மகர்வாச்சாம்போல் வந்தவன். தன் புகழின் மிகுதியால் திசைகளையெல்லாம் வெண்மையாகச் செய்தவன். விண்ணுலகிலும் மண்ணுலகிற்போல் லாபம் பெற்ற குணங்களையுடையவன். கடுமையான தவத்தினால் பார்வதியின் பிரசாதத்தைப்பெற்றவன். பரதநாட்டிற்கு தபோராசி போன்றவன். கற்றோர்களாகிய சகோதரங்களுக்கு முழுமதி போன்றவன். புரமதங்களாகிய இருட்டிற்கு சூரியன் போன்றவன். எல்லாக்கல்விகளுக்கும் உறைவிடமானவன். வினயத்திற்குத்தங்குமிடம் போன்றவன். பலவிதச்செல்வங்களாகிய ஆறுகளுக்குக் கடல்போன்றவன் என்று தெரியவருகிறது. மனிதர்களுக்கு மிகவுமுதவிபுரிந்த இந்த மன்னர்க்கு மன்னன் நமது தேயத்திற்குபுகழை விளைவிக்கும் மகாகவிகளை ஆதரித்தானென்பது இக்காலத்தவர்களாலும் புகழுடன் சொல்லப்படுகிறது. மிக அன்போடு அங்கீகரிக்கப்பட்டு அவனிடத்திலிருந்து வெகுமானங்களைப் பெற்ற காளிதாசர் முதலான கவிகளும் ரெகுவம்சம் முதலிய சிறந்த காவியங்களைச் செய்தார்களென்பது ஒரு செய்யுளால் தெரியவருகிறது. அதன் பொருள் "தன்வந்தரி, க்ஷபணகன், அமரசிம்மன், சங்கு, வேதாளபட்டன், கெடர்ப்பன், காளிதாசன்,...————, சரருசி, இவர்கள் சபைக்கு நவரத்தினங்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

இந்த விக்கிறமாதித்தன் ஆந்திரவம்சத்தில் பிறந்தவன். அக்கினிகுல அரசர்களுக்கெல்லாம் முதன்மையனவனென்று, மகாகவிகளாலும், புராணக்காரர்களாலும் பிரபந்தங்களாலும புகழ்ப்பெற்ற அரசனாயிருந்தான். அக்கினி குலத்திலுண்டான மன்னர்மணிகளோ வென்றால்

கீர்த்திமான்களாயும், ஏனைய தேசத்தவர்களால் பெரிய காரியங்களைச் செய்பவர்களென்று அடிக்கடி புகழப்பெற்றவர்களாயும், பௌத்தமதமென்கிற துஷ்டமிருகத்தைத் துரத்தக் காரணமானவர்களாயும், பிராமண்மதமென்கிற மண்டபத்தைத் தாங்க ஸ்தம்பங்கள் போன்றவர்களாயும் ஆண்டுவந்தார்கள். அக்கினி வம்ச மென்றால் என்ன? அது எந்த தேசத்திலிருந்தது? எதற்காக அவர்கள் பரதகண்டத்தவர்களால் புகழப்பெற்றவர்களானார்கள்? பௌத்தமதமென்றால் கிறிஸ்து மதமா? யவந மதமா? அல்லது துருக்க மதமா? இவைபோன்ற கேள்விகளுக்கு எம்மாலான் மட்டும் உத்தரஞ் சொல்லப்புகுவாம். (இன்னும்வரும்.)

டி. வி. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

## நன்றி மறவாமை.

நன்றிமறவாமையாவது தனக்குப் பிறர் செய்த உபகாரத்தை மறவாதிருத்தல். உபகாரமாவது பிரதியுதவியை விரும்பாதுசெய்யும் நன்மையாம். அளவற்ற செல்வமுடையவனாயினும், மிக்க பலமுடையவனாயினும், மேலான கல்வியுடையவனாயினும், பெரிய அதிகாரத்தைப் பெற்றவனாயினும், உலகமுற்றும் ஒரு குடையின்கீழ் அரசாளும் சக்கரவர்த்தியாயினும் சிலசமயங்களில் பிறர் உபகாரத்தைப் பெருமலிருக்க முடியாது. அப்படிப் பிறர் உபகாரத்தைப் பெற்றவா அதை யொருபோதும் மறக்கப்படாது. அதுவும் ஆபத்துக்காலத்தில் செய்த நன்றியை என்றும் எள்ளளவேனும் மறக்கவேபடாது. அவ்வாபத்துக்காலத்தில் செய்த நன்றி அற்பமேனும் காலத்தின் அருமை நோக்க அது உலக அளவினும் பெரியதாகும். தினை அளவு நன்றிசெய்தாலும் அதை அவ்வளவினதாகக்கொள்ளாது பனை அளவாகக்கொள்வர் சான்றோர். பிறர் செய்த உபகாரத்தைப்பெற்றவர் மறக்கப்படாதென்று முன்னுரைத்தோம். அபகாரஞ்செய்தாலோ, அதை அப்போதே மறந்துவிடவேண்டும். அதுபற்றியே "நன்றிமறவேல்" என ஔவையாரும், "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று" என நாயனாரும் உரைத்தனர். நமக்கு ஒரு காலத்தில் நன்மைசெய்தவர் பின்னொருகாலத்தில் தீமை புரிவாராயின் முன் செய்த நன்மையை நினைக்க, பின்செய்த தீமை யில்லையாய் விடும். பசுவின் முலையை அறுத்தல், கருவையழித்தல், சிசுவைக் கொல்லல் முதலிய பாதகங்களைச் செய்தார்க்கும் அப்பாதகங்கள் ஒழியத் தருமசாஸ்திரங்களில்பிராயச்சித்தங்கள்கூறுகின்றன. பிரதியுபகாரத்தை விரும்பாது நன்றி செய்தவர்களுக்கு அவர்கள் செய்த நன்மையைக் கருதாது தீமை செய்தவர்களுக்குப் பிராயச்சித்தம் விதிக்கப்படவில்லை. இதனால் நன்றி செய்தார்க்குத் தீமை செய்பவர் கொடியரினும் கொடியரென்றே விளங்குகின்றது.

ஒருவர் செய்தவுபகாரத்தை யெந்நாளும் மறக்கப்படாதென்றும், அபகாரத்தை மறக்கவேண்டு மென்றும், பிரதியுபகாரம் அவசியம் செய்யவேண்டு மென்றும் கூறுவதனால் எப்படியாகிலும் பிரதிஉபகாரஞ் செய்யவே வேண்டு மென்றெண்ணிச் சாஸ்திர விரோதமான தீயசெயல்களைச் செய்தும், பிறர்க்கு கஷ்டப்படுத்தி யிடையூறுபண்ணியும் நன்மை செய்யப்படாது. ஓர் நியாயாதிபதியினிடத்தில் உபகாரஞ்செய்த ஒரு

வனும் செய்யாத ஒருவனும்சேர்ந்து, வழக்குக் கொண்டுபோவார்களேல் அந்த நியாயாதிபதியானவர், உபகாரத்தை மறக்கப்படாதென்றும் மறந்தவர்க்கு உஜ்ஜீவிக்கும் வழியில்லையென்றுங் கூறுவதால் உபகாரஞ்செய்யாதவன் பக்ஷத்தில் நியாயம் பலமா யிருக்கும்போதும் அவனுக்கு நஷ்டமுண்டாக, உபகாரஞ்செய்த நியாயம் பலமில்லாதவன் பக்ஷமாய் நடுவு நிலையை தவறித் தீர்ப்பு செய்ய வொண்ணாது. உபகாரத்தைப் பெற்றநியாயாதிபதி தனக்கு உபகாரஞ் செய்தவனுக்குத் தன்சொந்தத்தில் பிரதிஉபகாரஞ்செய்து நன்றிமறவாமையைக் காட்டலாமேயன்றி, பிறரைக்கெடுத்து நஷ்டப்படுத்தி அவர் மனம்வருந்த நீதிதவறிப் பிரதிஉபகாரஞ்செய்யலாகாதென்பதாம். நமக்கு உபகாரஞ்செய்த ஒருவன் பலவீனனான பிறனொருவனை அநியாயமாய் அடித்துத் தொந்தரவு பண்ணி அவன் கையிலுள்ள பொருள்களை யெல்லாம் பறிப்பானேல் அச்சமயத்தில்அந்தப் பலவீனன் பக்ஷமாயிருந்து அவனையடியாமலும் பொருளைப் பிடுங்காமலும் செய்து பாதுகாக்கவேண்டும். இதனால் உபகாரஞ்செய்தவனுக்கு அபகாரஞ் செய்ததாயாவது, உபகாரத்தை மறந்ததாயாவது, பிரதிஉபகாரஞ் செய்யவில்லை யென்றாவது குற்றங்கூறவொண்ணாது. உபகாரஞ்செய்தவர், பொய், கொலை, களவு, விபசாரங்கள்செய்யவும், கள்குடிக்கவும் (விருத்தசபையில் ஊன்றுகோல்போ லுதவுவார்களென்றும் இன்னும் அநேகபேறுகளைப்பெற்றுச் சுகமாய் வாழலாமென்றுமெண்ணி நெடுங்காலம் தவஞ்செய்து பெற்ற) தாய் தந்தைகள் மனம்நோக அவர்களைவிடவும், ஜாதிமதம் கெடவும், இன்னும் இப்படிப்பட்ட அக்கிரமங்கள் செய்யவும் சொல்வாரேல் நடுவுநிலைமைதவறி நாம் அவ்வாறு செய்து ஆன்மலாபத்தை இழக்கப்படாது. உபகாரஞ் செய்தவர்க்குப் பதிலுபகாரஞ் செய்வதும் உபகாரத்தை மறவாதிருப்பதும் நடுவுநிலைமை தவறியன்று. உபகாரஞ்செய்தவர்களுக்கு நடுவுநிலைமை தவறிப் பிரதியுபகாரம்ஒருவேளை செய்யப் போகின்றார்களென்று கருதியே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளிய தமிழ்மறையான திருக்குறளில் "செய்ந்நன்றியறிதல்"என்னும் அதிகாரத்தின்பின் பகைவர், அயலார், நட்பினரான இம்மூவகை யோரிடத்தும் அறத்தினின்றும், வழுவாமல் சமமாய் நிற்கும் நிலைமை "யான "நடுவுநிலைமை" என்னும் அதிகாரத்தை வைத்தருளினார். ஆகையால் நடுவுநிலைமை தவறாமல் "நன்றிமறவாமை" யை அநுசரித்தல் வேண்டும் என்பதாம். நிற்க,

கருணைவடிவமும் பேருபகாரியுமான சர்வேஸ்வரன் பிரதியுபகாரம் விரும்பாமலே ஆணவ இருளில் அழுந்திக்கிடந்த ஆன்மாக்களை அஞ்ஞானம் ஒழிய மெய்ஞ்ஞானம்பெற்று, என்றும் பிரிதலில்லாத முத்தி யின்பம் பெறும்பொருட்டு வெளிப்படுத்தி தநு கரண புவன போகங்களைக் கொடுத்து, முத்திக்குச்சாதனமான கரும பத்தி ஞானங்களை அநுஷ்டிக்க வேதாகம சாஸ்திரங்களைத் தந்து, அவரவர் சரீரபலத்துக்கும் புத்தி வலிமைக்கும் ஏற்றவாறு படிப்படியாக அநேக மார்க்கங்களை உண்டாக்கியிருக்கிறார். பிரதியுபகாரம் விரும்பாமலே கொடுத்திருக்கிற அவர்க்குநாம்செய்யும் பிரதியுபகாரமாவது: அவரருளிய வேதாகம சாஸ்திரங்களின்படி கொலை, களவு, விபசாரம், பொய், சூது முதலிய தீமைகளை விலக்கி, சத்தியம், தயை, பொறுமை, பரோபகாரம், சாந்தம் முதலிய நன்மைகளை அநுசரித்துச் சாது சங்கத்தில் சேர்ந்து, நித்தியாநித்திய வஸ்துவிவேகஞ்செய்து, அநித்தியப்பொருளை விரும்பாமல்நித்தியபொ

ருளான பரப்பிரமசொரூபத்தின் அருளைத்தேடி, திரிகரண சுத்தியாய்ப் பணிந்து நற்கதி பெறுவதாம். அவருடைய சாயுஜ்ய பதவியை நாமடைவதைவிட வேறு பிரதியுபகாரம் அவர் விரும்பவில்லை. நாம் ஜனன மரண துக்கங்களை யொழித்து நித்திய சுகத்தைப் பெறுவதே அவர்விரும்பும் பிரதியுபகாரமானால் அவ்வாறுசெய்யாமல் அநித்தியபொருளைநித்தியப் பொருளென்று மயக்கி அதில்வீழ்ந்து துக்கசாகரத்தில் மூழ்குவது நன்றாமோ! இது அவர் விரும்பும் பிரதி உபகாரமாகுமா! ஆகாது!! ஆகாது!! ஆகையால் அவர்செய்த நன்றியை மறவாது அவரைத் தினந்தோறும் தியானித்து யான் என்னும் அகப்பற்றும், எனதென்னும் புறப்பற்றும் ஒழித்து முக்தி பெறுவோமாக.

"ஐந்தும் ஐந்தும் ஐந்துமாகி அல்லவற்று ளாயமாய்
ஐந்து மூன்றும் ஒன்றுமாகி நின்ற ஆதிதேவனே
ஐந்தும் ஐந்தும் ஐந்துமாகி அந்தரத்தணைந்து நின்று
ஐந்தும் ஐந்து மாய நின்னை யாவர் காண வல்லரே."

(திருமழிசை-ஆள்வார்)

பொருளாகக்கண்ட பொருளெவைக்குமுதற் பொருளாகிப் போதமாகி
தெருளாகிக்கருதும் அன்பர்மிடி தீரப்பருக வந்த செழுந்தேனாகி
அருளானோர்க் ககம்புற மென்றுன்னாத பூரண ஆநந்தமாகி
இருள்தீரவிளங்குபொருளியாதந்தப்பொருளினையாம்இறைஞ்சிநிற்பாம்

(தாயுமானவர்.)

க. வீ. சந்தானகிருஷ்ண நாயடு.

# பிள்ளைவளர்ப்பு.

(முன்தொடர்ச்சி)

பிள்ளைகளுக்கு மோசபுத்தி கற்றுக் கொடுக்கக்கூடாது. மேலும் அவர்களையும் எப்பொழுதும், மோசம் செய்யக்கூடாது. அவர்களுடன் சொல்லிய பேச்சை யென்றும் தவறக்கூடாது. தவறும்பட்சத்தில் அவர்கள் மறுபடியும் நம்மை நம்பமாட்டார்கள். ஆதலால் ஏதாவது கொணர்ந்துகொடுப்போமென்றாவது எவ்விடத்துக்காவது அழைத்துக்கொண்டு போவோமென்றாவது மற்றெந்த விஷயத்தைக் குறித்தாயிலும் அவர்களுடன் வெறும்வார்த்தைகள் சொல்லக்கூடாது. அவ்விதப் பேச்சுகளை அவர்கள் மறக்கமாட்டார்களாதலால் சொல்லியவண்ணஞ் செய்வித்தல் முக்கியமானது. உடன் பிறந்தவர்களையாவது தோழப்பிள்ளைகளையாவது தொண்டுகளையாவது ஏனையோர்களையாவது அடிக்கடியும் வருத்தப்படுத்திக்கொண்டு சில குழந்தைகள் முரட்டுக்குணம் பொருந்தியவர்களாயிருப்பார்கள். இதை ஆவசிகம் ஒழித்து விடவேண்டியது. இவ்வியற்கைமுற்றி வருமாயின் பெரியவர்களானபொழுது தயாளுத்தனமற்று ஈர இரக்கமில்லாதவர்களும் குரூரச்சுபாவ முள்ளவர்களுமாய் அநேகவிதமான இடையூறுகளுக்கு ஆளாவார்கள். மேலும் தோழக் குழந்தைகளை அநியாயம்பண்ணி அவர்களுடைய பொருள்களை அக்கிரமமாய் அபகரித்துக் கொள்ளவிடக்கூடாது. செட்டு சில்லரைக்கெல்லாம் சினந்துகொள்வது பிள்ளைகளுக்குப் பழக்கப் படுத்தக்கூடாது. இரங்கிய இள நெஞ்சுடனும் பொறுமையுடனும் இத்துற்குணத்தைப் போக்கடிக்க வேண்டியது. குழந்தைகள் விநயம்கெட்டு வாய்க்குவந்தபடி எல்லாம் வதறுவதும்கூடாது.

பெரியவர்களுடைய நடவடிக்கைகளையும் வழிகளையும் அனுசரிப்பதும் த
கா நு.நய, பய, விநயங்கள் இசைந்தமட்டும் பொருந்தியிருந்து, நாலுபேர்
நடுவில் பதமையாய்நடந்து கொள்ளும் பிள்ளைகள், பெற்றவர்களுடைய
இருதயக்கட்டுகளைப் பின்னிக்கொண்டு அபரிமிதமான ஆனந்தத்தையுண்
டுபண்ணுவார்கள். பிள்ளைகள் உலகவறிவு பெறவேண்டியவர்களாதலின்,
புதுப்பொருள்களைக்கண்டபொழுதும் ஏதேனும்தெரியாத விஷயம்காண
ப்பட்டபொழுதும் திரும்பித் திரும்பி வினவிக்கேட்பார்கள்: அப்பொழு
து அவர்களின்மேல் கசிந்து கொள்ளாமல் அவர்களுக்கு அச்சங்கதிகளை
ச்செவ்வையாய்த் தெரியப்படுத்தவேண்டியது. அவை அவர்களுக்குச்
சொல்லக்கூடாத விஷயங்களாயின் சொல்லத்தகாதென்று தெளிவுபட
த் தெரியப்படுத்த வேண்டியது. தங்களுடைய விளையாட்டுச்சாமான்க
ள், பொம்மைகள் முதலியவற்றைத்தாமே சாக்கிரதையாய்க் காப்பாற்றி
ஒழுங்காய் வைத்துக்கொள்ளும்படி பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கவே
ண்டியது. சோம்பல், அசிரத்தை, ஒழுங்குபாடில்லாமல் பொருள்களை
வழிக்குக் குறுக்கே போடல், இவைபோன்றகெடுவழக்கங்களைமாற்றவே
ண்டியது. கிரமமாய்ப் பொருள்களையிட்டுக் கொள்ளும் வழக்கம் பெரிய
வர்களான பிறகு மிகவும் பிரயோஜனப்படும். சிரிப்பு பிள்ளைகளுக்குப் பர
மானந்த கரமானது. நகையினால் அவர்களுடைய மார்புஅகலும். மூச்சுப்
பைகள் பலப்படும், இரத்தம் செவ்வையாய் ஓடி இருதயத்தைச் சந்தோ
ஷத்துடன் பொங்கச்செய்யும். ஜீரணசக்தி அதிகரிக்கும். ஆரோக்கியத்
துக்கும் தேகபலத்திற்கும் சிரிப்பு தேவாமிர்தத்திற்கொப்பானது. ஆதலி
ன் பிள்ளைகள் சிரித்துக்கொண்டிருக்கும் பொழுது அவர்கள் மேல் கோபி
த்துக் கொள்ளக்கூடாது. இவ்வளவே யல்லாமல் கேட்பவர்களுக்குக்
கூட, பிள்ளைகளின் சிரிப்பு விசாரங்களைப் பறக்கடித்துக் சந்தோஷ
த்தைப் பிறப்பிக்கும். பிள்ளைகளின் சிரிப்பு— ஆகா! அதன் கலத் தொ
னி, அதன் இன்னலைகள்! அதன் இயற்கை இயல்பு, அதன் உல்லாசம்,
அதன் உற்சாகம், அதன் மிருதுவும் இனிமையும்! அதனைக் காட்டிலும்
மனச் சந்துஷ்டிகரமாக விருக்கும், இசையொலி இவ்வுலகில் பிறிதேனு
முளதோ? (முற்றிற்று.) **M. S.**

## கலாப்பிரகாசனி.

(முன் தொடர்ச்சி.)

நிற்க, கமலாபுரியில் சுகுணமாலினி மீண்டும் கற்பவதியானாள். 10-
வது மாதத்தில் ஒருபெண்குழந்தை பிறந்தது. அதற்கு வனசலோசனி
என்றும் நாமகரணஞ் சூட்டினர். பின்இரண்டு வருஷத்திற் கெல்லாம்
மறுபடியும் இரண்டு குழந்தைகளைப் பெற்றாள். அக்குழந்தைகளிருவரில்
மூத்தவனுக்கு **வித்தியாதரன்** என்றும் இளையவனுக்கு ரூபசந்திரன்
என்றும் பெயரிட்டு அதிக ஜாக்கிரதையுடன் வளர்த்து வந்தனர். வன
சலோசனி மங்கைப்பருவமடைந்து 17-வதுவயதையும்கடந்து நவயௌ
வன யுவதியாய் விளங்கினாள். அன்னவளை சுந்தரபுரியின் மன்னனான
சுகுணோதயனுக்கு விவாகம் செய்து கொடுத்தனர். வித்தியாதரன் ரூப
சந்திரன் இவ்விருவரும் கல்வியைக் கசடறக் கற்றுக் கலாசாலையினின்
றும் நீங்கி பெற்றோரடி பணிந்து இராஜகுல சம்பிரதாயப்படி புவனச
ஞ்சாரம் செய்துவர அனுமதி பெற்று தேசாடனஞ் செய்யச்சென்றனர்.

இவர்கள் சென்ற சிலநாட்களுள் கலாலங்கிருதரைக்காண ஓர் சன்னியாசியார் வந்தார். கலாலங்கிருதரும் அவரை யுபசரித்து க்ஷேமலாப வர்த்தமானங்களை விசாரித்ததில் அவருடைய பெயர் நீத்தியானந்த ஸ்வாமிகள் என்றும் அவர் அநேக தேசங்களுக்கு யாத்திரை போயிருப்பதாயும் இரண்டாவது தடவை தேசசஞ்சாரம் செய்து வரவேண்டுமென்ற அபேக்ஷையுண்டானதினால் மறுபடியும் புறப்பட்டதாகவும் தெரியவந்தது. வந்த சன்னியாசியார் கலாலங்கிருதரைத் தன்னுடன் வரும்படியழைத்தனர். அவரும் தனக்கு நெடுநாளாய் இருந்த இவ்வெண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள இதுதான் தக்கதருணமென்றெண்ணி சன்னியாசியாருடைய வார்த்தைக் கொப்பித் தன் பிரிவைப் பொறுக்க ஆற்றலற்றவளாய்ப் பிரலாபிக்கும் தன் பிராணேஸ்வரியான சுகுணமாலினிக்கு வேண்டியதேறுதல்களைப் புகன்று விடைபெற்றுக்கொண்டு சன்னியாசியாருடன் சென்றார்.

பதியின் பிரிவாற்றாமையால் வருந்தும் சுகுணமாலினி ஒருநாளிரவு தனது நாயகன் கப்பலுடைந்து சமுத்திரத்தில் மூழ்கித் தத்தளிப்பது போலவும், அவர் அருமையாய்ப் பாதுகாத்துவந்த நான்குபுஸ்பச் செடிகளும் வாடிப்போயிருந்தது போலவும் அவருலட்ய உருவம் சித்திரமாயிருந்தபடம் கீழேவிழுந்து உடைந்து போனது போலவும் ஒருபயங்கரமான கனவுகண்டு அலறினாள்: எல்லோரும் நித்திரையிலிருந்து விழித்துக்கொண்டுஓடிவந்தனர். கடைசியிற் கனவிற்கண்டபடியே படம் உடைந்துபோய்க்கீழேவிழுந்தும், புஸ்பச்செடிகள் நான்கும் வாடிப்போயுமிருக்கக்கண்டு அனைவரும் வியப்படைந்து மனக்கலக்கங்கொண்டனர். சுகுணமாலினி வியஸனாக்கிராந்தையாய் பலர் தடுத்தும் கேளாமல் உலக சுகத்தை வெறுத்துத் துறவியானாள்.

நிற்க மாளவதேசத்தையடுத்த ஓர் காட்டில்நள்ளிருளில் பெரியவரொருவர்அதிககஷ்டத்துடன் நடந்துபோய்கொண்டிருந்தார். எவ்வளவோ பிரயாசையெடுத்தும் தன் தாகத்தைச் சாந்திசெய்து கொள்ள சிறிதாகிலும் ஜலம் கிடைக்காமற் போயிற்று. கடைசியில் மனம் வருந்தி அதிக களைப்புடன் ஒருமரத்தடியில் உட்கார்ந்தார். உடனேஇவர் தலையில் மரக்கிளை ஒன்று ஒடிந்து விழுந்தது. வெகு கஷ்டத்துடன் அதை எடுத்துவிட்டுப்பார்க்கையில் ஒருபெண் மூர்ச்சையாய்க்கிடந்தாள்.இதைக்கண்ட பெரியவர் மூர்ச்சை தெளியும்படிவேண்டிய உபசாரங்கள் செய்தனர்.சந்திரனும்உதயமாகி நிலவைவீசஆரம்பித்தான். இதற்குள் அந்தரமணிமூர்ச்சைதெளிந்து எழுந்துட்கார்ந்து தன்னைக் காப்பாற்றியவருக்கு வந்தனமளித்து தான் மாளவதேசாதிபராகிய ஞானாபரணருடையமனைவியென்றும் தன் பதியின்பிரிவாற்றாமையால் வருந்தி பலகஷ்டங்களையனுபவித்துஇங்கு வந்து இம்மரத்தின் கிளையில் கயிற்றைக் கட்டித் தன் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு மரத்தினின்றும் குதித்ததாயும் தன்பாரம் தாங்கமுடியாமல் மரக்கிளை ஒடிந்துவிழ அத்துடன் தானும் விழுந்ததாயும் தன்பெயர் நவமாலிகையென்றும் தெரிவித்தாள். இதைக்கேட்டதும் பெரியவருக்கு மனதில் சந்தேகமும் வியசனமும் உண்டாயிற்று. நவமாலிகையை வெகு ஆவலுடன் உற்று நோக்கி இடது காலைக்காட்டச் சொன்னார். அதில் ஓர்மச்சமிருந்தது. வலதுகையைப்பார்த்ததில் அதில்“கலாலங்கிருத நவமாலிகா”என்று பச்சை குத்தியிருக்கக்கண்டார். உடனே அதிக துக்கத்தோடு ஹா! நவமாலிகா!! இத்தனை வருஷங்கட்கு மேல்

உன்னை இந்த நிர்பாக்கிய ஸ்திதியிலா காணும்படிநேரிட்டது!. தெய்வச்செயலை யறிந்தார் யார்? உன்னை ஐந்து பிராயத்தில் எவரோ களவாடிச் சென்றனர். உன்னை மறுபடியும் காண்பேனென்று கனவிலும் கருதவில்லை. நான் அன்னியனென்று எண்ணவேண்டாம். உனது தந்தையான கலாலங்கிருதன் நான்தான். உனது மூன்றாவது பிராயத்தில் உனது தாயார் சுகுணமாலினி வேடிக்கையாக என் பெயரையும் உன் பெயரையும் ஒன்றுசேர்த்து உன் கையில் பச்சைகுத்தினாள். அப்பொழுது சாதாரணமாய் நினைத்த பச்சையே இப்பொழுது உன்னைக் கண்டு பிடிப்பதற்கு உதவியாய் நின்றதென்று கூறி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். இதைக்கேட்ட நவமாலிகை அதிக ஆச்சரியத்துடன் உற்றுநோக்கியதில் தன் தந்தையென்றே தோன்றிற்று. தக்ஷணமே நவமாலிகை கலாலங்கிருதரை வணங்கி என்னுயிர்போகும் நேரத்தில் உங்களையும், நீங்கள் தாகத்தால் வருந்தி இறக்குந்தருணத்தில் என்னையும் இவ்விடத்தில் ஒன்று சேர்த்தது கடவுளின் செயலே யாகுமென்றாள். இந்த சமயத்தில் வனசஞ்சாரியாயிருந்து வரும் கிருபாலோசனர் அகஸ்மாத்மாய் அவ்வழியே சென்றுகொண்டிருந்தவர், இதென்ன இந்த நடு ராத்திரியில் மனிதர் குரல் போல் சப்தம் கேட்கிறதே யென்று அவ்விடம்வந்து கலாலங் கிருதரையும் நவமாலிகையையும் கண்டு ஒன்றும் தோன்றாது பிரமித்தார். கிருபாலோசனரைக் கண்ட நவமாலிகை ஹா! பிதா! வென்று அலறிக்கொண்டு அவர் மேலே விழுந்து மூர்ச்சையானாள்.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

## ஞானம்பாள்.

(முன் தொடர்ச்சி.)

ராம்:— நான் ஒரு விஷயம் கூறுகிறேன். அதற்கு உதவி செய்தால் தங்களை மறக்க மாட்டேன். அது என் மனதை வாள் போலறுக்கின்றது!

வீரசி.— அதென்ன! சொல்!

ராம்:— அது குடும்ப விஷயம். பெரிய சங்கதி. அது இன்று இரவு முழுவதும் செல்லும். ஆனாலும் சுருக்கமாய்க் கூறுகிறேன். என் சிறிய தகப்பனாராகிய சுந்தரதாஸ் கோகுல புரம் ஜமீன்தாராயிருந்தார். அவர் இறந்து போனார். அவர் பிள்ளை யாகிய ஹரிதாஸ் என்பவர் அந்நிலங்களையும் பங்களாவையும் தன தாக்கிக் கொண்டு எனக்குப் பேசியிருந்த பெண்ணாகிய பார்வதி யம்மாள் என்பவளைத் தான் மண முடித்துக் கொண்டு எனக்கு வரவேண்டிய பாகத்தைக் கொடாமலு மிருக்கிறான். அவனுக்கிருக்கிற சொத்தோ எதேஷ்டம். எனக்கு ஓர் வழியால் கிடைக்கவேண்டிய பாகமோ அதனில் மிகுந்த சொற்பம். அதைத் தரமாட்டேனென்று மறுத்தனன். அதன்மேல் நான் வியாஜ்யம் செய்யத் தலைப்பட்டேன். ஆனால் அவன்பக்கமே அனுகூலமாயிற்று. நான் வாரியிறைத்த பணமெல்லாம் வீணாயின. ஆனால் அப்பீலுக்குப்போக யோசித்திருக்கிறேன். அதற்கு மிக்க செலவாகும். நான் இவற்றால் எளியவனாய் விட்டேன். அவன் மகா செல்வ வந்தனாய் விளங்குகிறான். நான் அவனை என் ஜன்ம முள்ளளவும் வெறுக்கிறேன். பாதகன்! நீர் எனக்கு உதவி செய்வீரா?

வீர:— நல்லது! அவன் இறந்து போனால் உனக்கு பாத்தியதை ஏற்படுமோ?

ராம:— இல்லை யில்லை! அவனுக்குக் கைக் குழந்தை ஒருபையனிருக்கிறான். அவன் ஓர் பெரிய தடைதான்.

வீரசி:— நீ தாராள மாயிருந்தால் சொல்! இப்போது 1000 ரூபாய் கொடுப்பதாகச் சொல். என் வீரரான அன்பர்கள் இவ்விஷயத்தில் துணை செய்யக்கூடும்! நான் அவர்களைக் கூப்பிடட்டுமா?

ராம்:— வேண்டாம்! அது கொலை யாக வன்றோ முடியும். நான் ஐவாப் சொல்ல வேண்டி வருமே?

வீரசி: சீ ! சீ !! இவ்வளவு தானா நீ. போ! போ!! பயங்காளி.

ராம்:— நான் பயங்காளி அல்ல மகாராஜ்! தாங்கள் அப்பேர்ப் பட்ட சொத்துக்களை யெல்லாம் விட்டு விடவா யோசிக்கிறீர்? ஐயோ!

வீர:— அப்படியானால் அவன் வீட்டில் என்ன இருக்கிறது சொல் பார்ப்போம். அவன் சாவகாரல்லவா?

ராம்:— (மிக்க ஆவலோடு) ஆம்ஆம்! இதுவுந் தவிர, பெரிய லேவாதேவி வியாபாரி. நகையிலேயே அவன்வீட்டில்முப்பதினாயிரமும்,ரொக்க விஷயத்தில் இருபதினாயிரமும் இருக்குமே. நிலவிஷயத்தில்வேறேயாய்

வீரசி:— ஆ! போதும்! இவ்வளவிருந்தால் பெரிய அதிருஷ்டமே.

ராம்:— மேலும் அவன் தடியன். பத்துப்பேரானாலும் ஒரே அடியில் எமலோகம் சேர்த்து விடக் கூடியவன். ஜனக்கட்டும் ஜாஸ்தி.

வீர:— ஆ! அப்படியா!!

ராம்:— நான் உண்மையைக் கூறுகிறேன். மேலும் அவனுக்கு ஒரு பையனும், ஞானம்பாள் என்னும் பெண்ணும் ஒன்றிருக்கிறது.

வீரசி:— அப்படியானால் காளி என்னைக்காப்பாள். அவன் கட்டாயம் செத்தே தீரவேண்டும். குழந்தையானால் என்ன குட்டி யானால் என்ன ஒரே வீச்சாய் வீசிப் போட்டாலென்ன?

ராம்:— குழந்தையைக் கூடத்தானே மகாஹாராஜ்!

வீரசி:— குழந்தைகள் சண்டை பிடிக்குமா, ஆனாலும் அதுவுந்தானேயிருக்கிறது?

ராம்:— மேலும் மற்றொரு விஷயம் கூறவேண்டி யிருக்கின்றது. கொல்லைப்புறம் இரண்டு வீட்டுக்கும் பெரிய கதவு இருக்கின்றது. நான் அவன் வீட்டிற்கு சில சமயங்களில் போவேன். எனது மனைவியும் போவாள். நான் தாங்கள் குறிப்பிடும் நாள் உள்ளே ஒழிந்து கொண்டிருக்கிறேன். ஏதாவது அடையாளத்தின் மீது கதவைத்திறந்து எல்லாரையும் உள்ளே விட்டு விடுகிறேன். என்னோடு இரண்டு ஆட்களை யனுப்புங்கள். அவர்களுக்கு எல்லாம் சொல்லி ஏற்பாடு செய்துவிடுகிறேன்.

வீரசி:— சரி! அப்படியே செய்தல் நலம் தான்! உடனே கோவிந்தன்! கறுப்பன், என்று கூவவே இரு ஆட்கள் வந்தனர். அப்போது அக்கொள்ளைத் தலைவன் ‘இவர் கூடப்போங்கள்! சொல்லுகிற படி கேளுங்கள்! நானும் நாளை அங்கே வருவேன். நாளை தான் நமக்கேற்பட்ட தினம். ஏனெனில் நாளை அமாவாசியை. போங்கள் போங்கள் சீக்கிரம். ஹே சாவகார் அவர்களுக்கு சகல உதவியும் செய்யும் எனக்கூறி அனுப்பி விட்டனன்.

(இன்னும் வரும்.)

K. S. வைத்தினாதய்யர்.

# தமிழ்ப்பாஷை.

:o:

(முன் தொடர்ச்சி.)

இனித் தமிழ்ப்பாஷையின் உற்பத்தி வளர்ச்சி தேய்வு முதலியன ஆராய்வாம்:

சுருதியொப்ப ஆதியில் வரிவடிவின்றி ஒலி வடிவாயிருந்த இத் தமிழ் இன்ன காலத்திற்றான் உற்பத்தியாயிற் றென்றேனும் இன்ன மனிதரால் உண்டாக்கப்பட்ட தென்றேனும் எவராலும் கூறமுடியாது.

ஆனல் "அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு" என்றும், "பொதியமா மலையான் மொழி" என்றும் வில்லி யாதியோர் கூறி யுள்ளதால், தமிழ் மகத்துவம் மிகுந்த அகத்தியனரால் உண்டாக்கப் பட்டிருக்க வேண்டுமெனச் சிலர் துணியலாம். ஆனல், வில்லியாதி யோர் கூற்று, உபசார வழக்கையும் சுவீகார புத்திர தருமத்தைப் பற் றியுமேயாம் என்பது நூல் வழக்கானும் மரபானும் பண்டையாசாரியர் உரையானும் கருத்தானும் தெற்றெனப் புலப்படும். எங்ஙனமெனில், தற்காலத்துள்ள தமிழ் நூல்களுக்கெல்லாம் ஆதி நூலாகக் கொள்ளப் பெற்ற ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்தை இயற்றி யருளிய வரும் அகத்தியரின் பிரதம சீடருமான தொல்காப்பியனர், தமது நூ லின் முதற்கண்.

"ஆதியிற் றமிழ்நூல் அகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்து தூஉம்
போத மெய்ஞ்ஞான நலம்பெறற் பொருட்டே"

என்று கூறியிருத்தலானும், அகத்தியர் தமிழ்மொழியை அவலோகித முனிவர்பால் கற்றுணர்ந்தார் என்று க்ஷமண மதமும், சுப்பிரமணியக் கடவுளிட மிருந்து தமிழ் மொழியையும் பரமசிவனிடத் திருந்து அதன் இலக்கணத்தையும் ஓதி யுணர்ந்தனர் எனச் சைவமதமும் கூறுவதாலும், அகத்தியற்கு முன்னும் தமிழ் இருந்திருக்கிறது என்பது நன்கு புலப் படும் அன்றோ? ஆதலின் அகத்தியர் தமிழ் நெடுங்கணக் கேற்படுத்திய வர் என்பதே பொருந்தும். நிற்க,

இவ் வக்ஷரகாலமே தமிழுக்கு ஆதி இலக்கிய காலமாயிற்று. இலக் கியங்கண்டதற் கிலக்கணம் இயம்புதல் விதியாதலின்.

இக்காலத்து, தொல்காப்பியர், அதங்கோட்டாசான், துராலிங்கன் செம்பூட் சேய், வையாபிகன், வாய்ப்பியன் பனம்பாரன், கழாரம்பன், அவினயன், காக்கை பாடினியன், நற்றத்தன், வாமனன், என்னும் அகத்தியரது பன்னிரு சீடரும் அவரிடத்தில் அவர் செய்த சிற்றகத்தி யும் பேரகத்திய இரண்டும் முற்றக் கற்றுத் தத்தம் பெயரால் வேறு வேறிலக்கணமும் அனைவரும் ஒருங்கு சேர்ந்து புறப்பொருட் பன்னிரு படலமும் எழுதினராம்.

அப்பால், சங்கங்கள் ஏற்பட்டுத் தமிழ் வளர்க்கலாயின. அவை நீண்டகாலம் இடை யீடுபட ஒன்றன் பின் ஒன்றாய் நிகழ்ந்தனவாத லின், அவை தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் எனப் பெயர் பெறும். அவற்றைப்பற்றிய விஷயச் சுருக்கம் அடியில் வருமாறு காண்க:—

தலைச்சங்கம்:—இற்றைக்கு ஏறக்குறைய 4500 வருடங்களுக்கு முன்னர் இருந்ததாகக் கொள்ளப்படும் இச்சங்கம் காய்சினவழுதி முதல் கடுங்கோன் வழுதி யீருக 89 பாண்டியர்களைக் கொண்டதாம். இப்பாண்டியருள் எழுவர் கவியரங் கேறினோராம். இச்சங்கத்து வீற்றிருந்த புலவர் தொகை 549. இதில் 4449 புலவர்கள் தத்தம் நூல்களை அரங்கேற்றியுள்ளார். அந்நூல்களிற் சிலவாகிய தொல்காப்பியம் காக்கை பாடினியம் முதலியவற்றில் இயற்றமிழும், பெருநாரை பெருங்குருகு முதலியவற்றில் இசைத்தமிழும், முறுவல், சயிந்தம் குணநூல் முதலியவற்றில் நாடகத்தமிழும் விரித்துரைக்கப் பட்டனவாம். இச்சங்கம் இருந்தவிடம் "தக்ஷிண மதுரை". இது கடல் கொள்ளப் பட்டது.

இடைச்சங்கம்:—முன்பின் 3500 வருஷங்களுக்கு முன்பு இருந்ததாகக் கூறப்பெறும் இச்சங்கம் வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறனீருக 59 பாண்டியரைக் கொண்டதாம். இவரில் கவியரங்கேறினோர் ஐவராம். இதில் வீற்றிருந்த புலவர் தொகை 509. தமது நூல்களை அரங்கேற்றிய புலவர்கள் 3700 பேர்கள். இச்சங்கத்தின் ஸ்தானம் "கபாடபுரம்". இதுவும் கடல் கொள்ளப்பட்டதே, இச்சங்கத் தரங்கேறியவை கலிகுருகு வெண்டாளி முதலியன.

கடைச்சங்கம்:— இது ஏறக்குறைய 2000 வருஷங்களுக்கு முன்பு இருந்ததாகத் தெரியவருகிறது. இச்சங்கம் முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதியீருக 49 பாண்டியர்களைக் கொண்டது. இவருள் கவியரங்கேறியோர் மூவர். இச்சங்கத்து வீற்றிருந்த புலவர் தொகை 49. தத்தம் காவியங்களை அரங்கேற்றிய புலவர்கள் 449 பேர்கள். நெடுந்தொகைநானூறு, புறநானூறு, குறுந்தொகை நானூறு. எழுபதுபரிபாடல் முதலியநூல்கள் இதில் அரங் கேறியவை. இவற்றுள் திருவள்ளுவ நாயனரது "திருக்குறள்." தான் கடைசியாக இச்சங்கத்து அரங்கேறிய நூலாம். இச்சங்கம் இருந்தவிடம் தற்காலம் "மதுரை" யென வழங்கும் "உத்தர மதுரை" யே. (இன்னும் வரும்.)

M. கோபால கிருஷ்ணையர்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்ராஸநாதிபதி.

## புத்தகவரவு.

ஸ்ரீகிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள் சரித்திரம்— பாவலருக்கு திலகம் போலும் படிப்பவர் மனதைப் பரவசப்படுத்தும் பான்மையை விளக்கி, யாவருக்கும் தெவிட்டாத இன்பத் தேனினைச் சொரிந்து, பூவுலக மாந்தர் புரிந்த நற்றவமாய் மேவிட ஜொலிக்கும் சாக்ஷாத் அகிலாண்ட நாயகனின் அவதாரமான அற்புதசுதையை ஆவலாய்ப் பெற்றனம். இதனைத்தேனினு மினிய செந்தமிழ் நடையில் எவ்வித பிழையுமின்றி நடை நோக்குத் தொடைநோக்கு முதலிய இலக்ஷணங்களோடு முடித்திருப்பதும், பாவலர்க்குக் கைக்கனியாய் இடைஇடையே தோன்றும் அரியபெரிய அற்புதங்களும் மெத்தவியக்கற்பாலதே. இந்நூலின் நடை கற்றாருங் கல்லாரும் ஒருவித இடர்பாடுமின்றி யெளிதின் அறிந்து ஆனந்தங்கொள்ளும் வண்ணம் எவ்விடத்திலாயினும் ஒருசிறிதும் தடைப

இதவின்றி ஆற்றின் பிரவாகம் போல் செல்லுகின்றது. ஸ்வாமிகள் சரித்திரம் பக்திரசமும் சோகரஸமும் மிகுந்து படிக்கப் படிக்கப் பரமானந்தமளித்து முடிக்க மனமெழா முதன்மையைப் பெற்றுளது. இந்நாலின்கண் ஆங்காங்கு தோன்றும் ஒவ்வொரு கவிகளுநள்ளும், அமைந்துகிடக்கும் சொற்றிறம், பொருட்பொலிவு, அணிநலம், நல்லிலக்கணப்பிரயோகம் பக்திரச முதலிய விசேடங்கள் எம்மாற் கூறப்படும் தன்மையனவல்ல. இந்நூல் ஓசையுடைமை, ஆழமுடைமை யடைந்து ஆன்றோர் செய்யுட்களின் அழகொலாங் கவர்ந்து பசுந் தமிழ்ச் சொற்கள் செறிந்து பாச்சுவை பரவிய நடையானமைந்து ஆக்கியோனது கல்வித்திறனையும் தமிழ் ஆராய்ச்சி வன்மையையும் செவ்விதிற் காட்டுகின்றது. சக்கரைப்பந்தலிற் றேன் மாரி பொழிந்து போல இந்நூலுக்குப் பாயிரமாகச் சேர்ந்திருக்கும் ஆங்கிலேய தர்க்கசாஸ்திர நுட்பங்காட்டி செய்துள்ள நீரீஸ்வர வாதகண்டனம் அதிசிலாக்யமா யிருக்கின்றது. இக்காலத்தில் இத்தகைய நூற்களே நம் நாட்டிற்குத் தேவை. இவ்வருடத்திய B. A பரிக்ஷைக்குப் பாடமாக இதை வைத்திருப்பதும் இவற்றின் அருமை பெருமையை நன்கு விளக்குவதற்குத் தக்க சான்றாகும். இத்துடன் இப்புத்தகத்தில் ஸ்வாமிகளின் திருவுருவுப் படமொன்றும் வைக்கப்பட்டிருக்கின்றது. இகபரசாதகத்தை யுன்னிப் பாடுபட்டுழைத்தவரின் பெற்றிக்கு இறும்பூதி கொள்வதன்றி எம்மால் மற்றொன்று செய்யச் சற்றுந்தரமில. நந்தமிழுலக மிது காறும் கண்டிராத இவ் வுத்கிருஷ்ட்டமான ஸத்கிரந்தத்தினை நம்பாலன்பு வைத்தனுப்பிய நமது ஆப்தமித்திரரும் இந்நூலாசிரியரு ளொருவருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ T. பக்தவத்ஸலம் பிள்ளை B. A. அவாகட்கு எமது ஹிருதயபூர்வ விநய வந்தனத்தைச் செலுத்தி நன்றிபாராட்டுகின்றோம்.

மாதர்நீதிமாலை:—இச் சிறப்பெயர் தரித்த நூலொன்று நமது பார்வைக்கு வரப்பெற்றனம். நந்தேயத்து மாதர்கட்கு இந்நூல் அத்யாவசியகமாய் வேண்டற்பாலது. அநேக அரிய நீதிகள் இப்புத்தகத்தில் ஒருங்கே திரண்டிருக்கின்றது. இன்பகரமான பாக்களால் நிறைந்து படிக்கப்படிக்கப் பரவசமளிக்கின்றன. அவற்றின் அருமை பெருமைகளைப்பற்றி எவ்வளவு விஸ்தரித்துப் புகழ்ந் தெழுதிடினும் தகுமென்றே கூறலாம். இதை இயற்றியவர் நமது நண்பரும் இப்பத்திரிகையின் நிருபநேயருமான மகா-ள-ள-ஸ்ரீ P. S. அனந்த நம்பியார் அவர்களாவர். சிறுவர் சிறுமியர்கட்கு சுலபமான வழியில் பல நீதிகளைப் போதிக்கவெண்ணி ஏற்கனவே பல புத்தகங்களை வெளியிட்டிருக்கின்றனர். அவற்றினை விளம்பரத்திற் கண்டுகொள்க. இப்புத்தகத்திற்கு விலை அணா 3 ஆக வைத்திருப்பதும் அனைவரும் வாங்கி வாசிக்கவேண்டுமெனு மாவலேகாரண மென்னலாம். இப்புத்தகத்தை நம்பார்வைக்கு வரவிடுத்தநேயரவர்கட்கு உகந்த வந்தனமளித்து மிகுந்த நன்றி பாராட்டுகின்றோம்.

பாலர்க்கினிய கீதம்:—பெயருக்கேற்றபடியே விளங்கும் இப்புத்தகத்தில் அநேக அரியநீதிகள் அடங்கி யிருக்கின்றது. அமிர்தஞ்சரக்கும் ஒவ்வொரு இனிய பாடலையும் படித்து உரையாலளப்பரும் பெருமகிழ்வடைந்தனம். சிறுவா சிறுமியர்கட்கு இது மிகவும் பிரயோஜனப்படத்தக்கது. இதை நம் பார்வைக் கனுப்பிய மகா-ள-ள-ஸ்ரீ C. ஸ்ரீராமஐயங்காரவர்கட்கு அநேக வந்தன மளிக்கின்றோம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்:—இதின் நான்காம் வருஷோத்ஸவ அறிக்கையின் பிரதி ஒன்று அச்சங்கத்தின் அக்ராஸனாதிபதி

யவர்களிட மிருந்து வரப்பெற்றோம். இச்சங்கத்தால் ஜனங்கள் பல விதத்திலும் நன்மையடைந்து வருகின்றனர். இதின் அபிவிர்த்திக்கு மிஸ்டர் M. கோபாலகிருஷ்ண ஐயரவர்களுடைய தளரா முயற்சியே காரணமாகும். இவ்வளவு சிறப்புடன் இச்சங்கத்தை நடத்தி வருவதைப் பற்றி யாமடையும் மகிழ்ச்சிக்கெல்லையில்லை. இச்சங்கம் மேன்மேலும் விர்த்தி யடையுமாக.

# நித்திரை.

முயற்சிக்க வேண்டிய சாதனங்களை நாம் தூங்கும்பொழுதுதான் மூளை அடைய ஏதுவாகின்றது. நாம் தூங்கப் போகும் பொழுது நரம்புக்குரிய சக்தி (Nervous onergy-) யெல்லாம் குன்றியிருப்பதை யாவரு மறிவார்கள். தூக்கக்கண்ணாக இருக்கும்பொழுது எவ்விஷயத்தையும் நமது செவி ஜாக்கிரதையுடன் ஏற்பதில்லை. ஏதேனும் ஒன்றை நோக்க வேன்டியிருப்பினும் கண்களுக்கு அதிக சிரமத்தை யளித்தே பாாக்க வேண்டியிருக்கிறது. அப்படி பார்த்தபோதிலும், சிற்சில சமயங்களில் பார்த்ததாக ஞாபகமிருப்பதுமில்லை. 5, 6, மணி நேரம் தூங்கிய பின் இவ்வண்ண மிருப்பதில்லை. கொஞ்ச சப்தம் தூக்கத்தினின்றும் நம்மை எழுப்பிவிடுகிறது. படுக்கை யறைகளின் பலகணி வழியா யடிக்கும் சொற்ப வெளிச்சங்கூட, நித்திரையினின்று விழிக்கும் வண்ணம் நம்மைச்செய்கிறது. இது ஏன்? அதிக வேலைசெய்து களைத்துப் போயிருக்கும் நமது தேகம், மூளை இவைகள் அவைகளின் சக்திகளைத்திரும்ப அடைந்தவைகளாய் ஆகின்றன. புதியவேலைகள் செய்வதற்குத் தயாராகவிருக்கின்றன. மனது தெளிவடைகிறது.

"அதிகாலையில் எழுந்து நூற்களைக் கற்றுக்கொள்" என்று நமது பெரியோர்கள் சொல்வதும் இவ்விதக் காரணங் கொண்டே. "காலை கல் மாலை புல்" என்று ஓர் பழமொழியும் உண்டு. ஆகையால் மனிதன் தூங்கவேண்டுவது ஆவசிகமே என்று ஏற்பட்டது.

"எவ்வளவு நேரம் ஒருமனிதன் தூங்கவேண்டும்" என்ற விஷயத்தை விசாரிக்கப்புகின், அவரவர்கள் தேக சக்திக்கு ஏற்றவாராயுளது. என்ற விடைதான் கிடைக்கக் கூடியதாக விருக்கிறது. வயதுக்குத்தக்கவண்ணமும் வித்தியாசப் படுகிறது. ஒரு நாளைக்கு குழந்தைகள் 16 மணியும், 2வயதுக் குழந்தைகள் 14 மணியும், 4வயதுக் குழந்தைகள் 12 மணியும், 8வயதுக் குழந்தைகள் 11 மணியும், 12வயது பையன்கள் 10மணியும், இவ்வயதுக்கு மேற்பட்டவர்கள் 7 மணிமுதல் 9 மணியும் தூங்க வேண்டுவது ஆவசிகமாகும். புருஷர்களைக் காட்டிலும் ஸ்திரீகள் ஒரு மணி அதிகமே நித்திரை செய்தல் வேண்டும். மூப்புப்பருவத்து அதிக காலம் தூங்கவேண்டும். பின் இராத்திரியைக் காட்டிலும் முன் இராத்திரியே தூங்குவதற்கு சிலாக்கியமான காலமென்று கூருகிறார்கள். "வைகறைத்துயிலெழு" என்றுஔவை சொல்லியவண்ணம் விடிந்தவுடனேயே நித்திரையினின்று நீங்குவது நலமாம். இல்லாவிடின் சோம்பல், அசதி இவைகள் மேலிடுவதை நாம் நன்றாய்க் கண்ணுறலாம். "அதிகாலையில் எழாவிடின் பிசாசானது கருப்புப் போர்வைக் கொண்டு நம்மைப் போர்த்தி அசதியுடன் சோம்பலா யிருக்கச்செய்யும்" என்று சில மதஸ்தர்களதுகொள்கை. அசதியும்சோம்பலும் அதிகமாவதை நாம் நேரிலேயே கண்ணுறலாம்.

16

"புத்தியதற்குப் பொருந்து தெளிவளிக்குஞ்
சுத்த நரம்பினறற் றூய்மையறும்—பித்தொழியும்
தாலவழியாத பித்தந் தத்த நிலை மன்னுமதி
காலைவிழிப்பின் குணத்தைக் காண்".

உதயகாலத்து விழிப்போர்களுக்கு வாத, பித்த, சிலேஷ்டம் தங்கள் தங்கள் இடத்திலேயே இருக்கப்பெறும். புத்திக்குத் தெளிவையுணர்த்துகிற சுத்த நரம்புத் துவாரத்தில் நிறைந்திருக்கும் நீர் கலங்கலின்றியிருக்கும்.

வேதங்கற்பவர்கள், சங்கீதசாஸ்திரம் பயிலுவோர்கள் முதலிய சகல வித்தியார்த்திகளும் விடியற்காலத்தில் தங்கள் தங்கள் வித்தைகளைச் சிரமப்பட்டுக் கற்பதை ஒருவரும் அமியார்களா? கேவலம் பட்சிஜாதிகள் கூட அதிகாலையிலெழுந்திருந்து இனிய குரலுடன் பாடுகின்றன. அவ்வண்ணமிருக்க பகுத்தறிவுடன் கூடிய மனிதர்கள் எழுந்து தெய்வதுதி பாடிக் கொண்டிருத்தல் கூடாதா? கற்றல் கூடாதா? "அந்திப்பொழுது கிடவார்" என்று சொல்லிய வண்ணம் சாயந்திர வேளையில் படுத்தல் கூடாது. சிலர் இராக்காலத்தைப் பகற் காலமாக்கி நாடகம் பார்ப்பதிலும், கூத்துப் பார்ப்பதிலும் செலவழித்து விட்டு பகற்காலத்துத் தூங்குகிறார்கள். அது அவ்வளவு நன்மையை பயக்குமென்று தோன்றவில்லை.

'காலை துயில் சீலம்போம், கண்டபக லாக்கம் போம், மாலை துயிலினோயாம்" என்றதை அவர்கள் அறியத்தக்கது.

இரவில் சீக்கிரமாவது படுக்கைக்குச் சென்று, அதிகாலையிலேயே எழுந்திருந்தால் நலம். அவ்வண்ணம் செய்வதால் நமது தேகம் சௌக்கியமாயிருப்பதுடன். நாமும் அநேகநன்மைகளைப் பெற்றவர்களாக ஆகிறோம் "நாம் சீக்கிரம் படுக்கைக்குசென்று, சூரியன் உதயமாகுமுன் எழுந்திருப்போமேயாகில் இலட்சுமி நம்மைவிட்டு நீங்காள்" என்று பெரியோர் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். இவ்வண்ணமே, மேனாட்டு ஜனங்களும், 'சீக்கிரம் படுக்கைக்கு சென்று அதிகாலையில் எழுந்திருக்கும் ஒருமனிதன் சுகவானாகவும், புத்திமானாகவும் தனவானாகவுமிருப்பானெனச் சொல்வது வழக்கம். அநேக கிராமங்களில் இச்சொல்லை மிக்க மரியாதையுடன் நடத்திவருகிறார்கள். பட்டணவாசங்களில்தான் அநேகமாய் மேற் கூறப்பெற்றுள சொல் கவனிக்கப் படாதிருக்கிறது. ஆனால் இப்பழமொழியைப் பற்றி அங்கொருவரும் தர்க்கிப்பது இல்லை. உண்மை யென்றே ஒத்துக் கொள்ளுகிறார்கள்.

அதிகாலையில் எழுந்திருத்தலா லடையும் நன்மைகள்:—(1) அன்றையதினம் செய்யவேண்டிய வேலைகளைச் சீராகச்செய்ய ஓர் தூண்டுகோல் போலாகிறது.

(2) சீக்கிரம் எழுந்திருக்குமொருவன், படுக்கையைவிட்டு அநேகர் எழுந்திருக்குமுன், கஷ்டமான வேலையில் அதிக பாகத்தைச் செய்தவனாகின்றான். அதிகாலையில் மனது மிக்க சுத்தமாகவிருக்குமென முன்னமேயே சொல்லப்பெற்றுளது. சப்தங்களும், வேறுவிதமான தடங்கல்களும் அதிகாலையில் அவ்வளவு அதிகமில்லை. ஆகையால் விடியற்காலம் செய்யப்படும்வேலை நன்றாகவே இருக்கும். அதிகமாகவும் செய்துமுடிக்கலாம். கஷ்டமான வேலையெனினும் சிரமம் தோன்றாது.

(தொடர்ந்து வரும்.) S. N. ஸ்ரீனுவாசன்.

3m 21192, NO4